**செம்பாக்கம் நகராட்சியில் 31.7.2020ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. கா. ராஜலட்சுமி**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் ஜுலை **2020** மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.671 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சியின் முதல் நிலை சேகரிப்பு வானமான டாடா ஏசி வாகனம் பதிவு எண். TN22 BX 3570ற்கு இரண்டு டயர்கள் மிகவும் பழுதடைந்த நிலை ஏற்பட்டு இயக்க இயலாமல் அவ்வப்போது பஞ்சர் ஆகி தொடர்ந்து குப்பைகள் அகற்றும் பணி தாமதமாகிறது. இதன் காரணமாக பொது மக்களிடமிருந்து குப்பைகள் உரிய நேரத்தில் எடுக்க இயலாததால் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது.

எனவே, பொது மக்களின் நலன் கருதியும், தற்போது கொரோனா வைரஸ் பரவி வருவதாலும், மத்திய மற்றும் மாநில அரசுகளின் மூலம் அறிவிக்கப்பட்ட பொது ஊரடங்கு உத்திரவினை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த இயலாத சூழ்நிலையில், அவசர அவசியம் கருதி **1920**ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு **15** ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நேரடி விற்பனையாளர் / விநியோகஸ்தர்கள் ஆகியோரிடமிருந்து விலைப்பட்டியல் பெற்று மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.**0.06** இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசிய பணியாக **1920**ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு **15**ன் கீழ் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், டயர், டியுப் உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் நேரடி விற்பனையாளர் / விநியோகஸ்தர்கள் ஆகியோரிடமிருந்து விலைப்பட்டியல் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.672 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சியில் **2020–21**ம் நிதியாண்டு பொது நிதியின் கீழ் கீழ்காணும் பணிகள் மேற்கொள்வதற்காக **10.7.2020** அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 15 வரை குடிநீர் பகிர்மான குழாய் விடுபட்ட தெருக்களில் பகிர்மான குழாய் பதித்தல் பணி | 9.80 | எஸ்.வி.பி. எலக்ட்ரிகல்ஸ் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| | | | ராஜலட்சுமி கான்ட்ராக்ட்ஸ் | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |
| 2 | கௌரிவாக்கம் வணிக வளாகத்தில் மராமத்து செய்தல் பணி | 3.00 | அருணாச்சலம் இன்பிராஸ்ரக்ஷர் டெவலப்மன்ட் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | எல். கிஷோர் குமார் | மதிப்பீட்டை விட 1.80% அதிகம் |
| 3 | 1000லிட்டர் கொள்ளளவு கொண்ட HDPE டேங்க் உடைந்துள்ளதை அகற்றி புதியதாக பொருத்தும் பணி மற்றும் சரவணா நகர், மணிமேகலை தெரு, சங்கோதியம்மன் கோயில் தெரு, கணேஷ் நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக வால்வு பொருத்தும் பணி | 5.50 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | ஆர்.பி. கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டை விட 1.60% அதிகம் |
| 4 | களத்து மேடு தெரு, 2வது பஜனை கோயில் தெரு, ஆர்.பி. அவென்யு, ஆகிய பகுதிகளில் எற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் புதியதாக 5 எச்பி மோட்டார் இறக்கி நேரடி நீருந்தும் செய்யும் பணி | 5.40 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | ஆர். பி. கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 5 | பரிமேல் அழகர் தெரு, ஏரிக்கரை தெரு, காவேரி தெரு, வசந்தம் அவென்யு ஆகிய பகுதிகளில் எற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் புதியதாக 5 எச்பி மோட்டார் இறக்கி நேரடி நீருந்தும் செய்யும் பணி | 7.50 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | ஆர். பி. கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.673** **அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.4

செம்பாக்கம் நகராட்சியில் 2020–21ம் நிதியாண்டிற்கு ஆண்டு பொது சுகாதாரப்பிரிவின் கீழ் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக 15.7.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பொது சுகாதார பணிக்கு தேவையான பொருட்கள் மற்றும் தளவாடங்கள் சப்ளை செய்தல் பணி | 6.00 | டி. எ. ஏஜென்சிஸ் சென்னை – 11 | குறைவு |
| | | | தி சென்னை தலைமை செயலக பணியாளர் கூட்டுறவு சங்கம் சென்னை – 9 | அதிகம் |
| 2 | நகராட்சி பகுதியில் அமைந்துள்ள கட்டிடங்களிலிருந்து வெளியேறும் கழிவு நீரை தனியார் கழிவு நீர் அகற்றும் ஊர்தி மூலம் கழிவு நீர் அகற்றுதல் உரிமம். | -- | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை | |
| 3 | பொது சுகாதார பிரிவில் கொசு ஒழிப்பிற்கு பயன்படுத்தப்படும் புகையடிக்கும் இயந்திரங்கள் பழுது பார்த்தல் பணி | 2.00 | கார்த்திகா சிஸ்டம்ஸ் இன்ஜினியரிங், சென்னை – 83 | குறைவு |
| | | | பவானி அம்மன் எண்டர்பிரைசஸ் சென்னை – 78 | அதிகம் |
| 4 | பொது சுகாதார பணிக்கு தேவையான பிளிச்சிங் பவுடர் சப்ளை செய்தல் பணி | 2.00 | டி. எ. ஏஜென்சிஸ் சென்னை – 11 | குறைவு |
| | | | தி சென்னை தலைமை செயலக பணியாளர் கூட்டுறவு சங்கம் சென்னை – 9 | அதிகம் |
| 5 | பொது சுகாதார பணிக்கு தேவையான சுண்ணாம்புத்துாள் (நீர்த்த சுண்ணம்) சப்ளை செய்தல் பணி | 2.00 | ஆர்.எஸ்.ஆர். எண்டர்பிரைசஸ் சென்னை 45. | குறைவு |
| | | | தாம்பரம் கடப்பேரி ஆதிதிராவிடர் தொழில் ஒப்பந்த கூட்டுறவு சங்கம் சென்னை 45. | அதிகம் |
| 6 | MCC, OCC பராமரிப்பிற்கு தேவையான டியோடிசைன், ரெடிமிக்ஸ் மற்றும் லெமன் கிராஸ் மருந்துகள் சப்ளை செய்தல் பணி | 6.00 | கே. ராமதாஸ் ஒப்பந்ததாரர் சென்னை 45 | குறைவு |
| | | | சிம்லா கூல் மேக்கர்ஸ் ஒப்பந்ததாரர் சென்னை 45 | அதிகம் |
| 7 | நகராட்சியில் உள்ள பொது சுகாதார பிரிவு வாகனங்கள் JCB-1 எண்ணிக்கை, காம்பாக்டர்கள் - 3 எண்ணிக்கை மற்றும் லாரி-1 எண்ணிக்கை தகுதிச்சான்று பெற ஆண்டு பராமரிப்பு செய்யவும், | 10.00 | எம்.கே.எஸ் மோட்டார்ஸ் சென்னை 117. | குறைவு |
| | | | சரவணா பெயின்டிங் | அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள், ஆயில் மாற்றம் செய்யும் பணி மற்றும் வாகனங்களுக்கு தேவையான ஆயுள் காப்பீடு, சாலை வரி, பசுமை வரி இதர வரியினங்கள் செலுத்தும் பணி | | ஓர்க்கஸ் சென்னை 43 | |
| 8 | பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்படும் TATA ACE 6 எண்ணிக்கையிலான வாகனங்கள் தகுதிச்சான்று பெற ஆண்டு பராமரிப்பு செய்யவும், அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள், ஆயில் மாற்றம் செய்யும் பணி மற்றும் வாகனங்களுக்கு தேவையான ஆயுள் காப்பீடு, சாலை வரி, பசுமை வரி இதர வரியினங்கள் செலுத்தும் பணி | 10.00 | எம்.கே.எஸ் மோட்டார்ஸ் சென்னை 117. | குறைவு |
| | | | சரவணா பெயின்டிங் ஓர்க்கஸ் சென்னை 43 | அதிகம் |
| 9 | நகராட்சியின் மூலம் வாரம் இரண்டு நாட்கள் அகற்றப்படும் பிளாஸ்டிக் மற்றும் எரியூட்டக்கூடிய கழிவுகளை தனியார் வாடகை லாரி மூலம் வெளியேற்றி அனுப்புவதற்கும், மற்றும் அதற்கு தேவையான போராக்களை சப்ளை செய்தல் பணி | 5.00 | கே. ராமதாஸ் ஒப்பந்ததாரர் சென்னை 45 | குறைவு |
| | | | சிம்லா கூல் மேக்கர்ஸ் ஒப்பந்ததாரர் சென்னை 45 | அதிகம் |
| 10 | MCC/OCC இரண்டு 5.00 டன் கொள்ளளவு கொண்ட பசுமை நுண்ணுயிர் உரக்கூடம், 6 சிறிய உரக்கூடங்குகளுக்கு தேவையான உயரிகலவைகள் தயாரிக்க தேவைப்படும் வெல்லம், தயிர், தவிடு, உமி மற்றும் மரத்தூள்கள் சப்ளை செய்தல் பணி மற்றும் உலர் கழிவு சேகரிப்பு மையத்திற்கு தேவையான பேலிங் பொருட்கள் சப்ளை செய்தல் பணி | 5.00 | கே. ராமதாஸ் ஒப்பந்ததாரர் சென்னை 45 | குறைவு |
| | | | சிம்லா கூல் மேக்கர்ஸ் ஒப்பந்ததாரர் சென்னை 45 | அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், ஒப்பந்தப்புள்ளி பெறப்படாத இனங்களுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்.674 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

செம்பாக்கம் நகராட்சி தீவிர கொரோனா பெருந்தொற்று தடுப்பு நடவடிக்கை நகராட்சி பகுதியில் உள்ள 17000 வீடுகளுக்கும் தவறாமல் கொரோனா தடுப்பு ஹோமியோபதி மாத்திரையான ஆர்சனிக்கம் ஆல்பம் 30 மாத்திரைகள் அனைத்து வீடுகளிலும் வழங்கிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு மண்டலம் தாம்பரம் அவர்கள் தெரிவித்துள்ளதன் பேரில் நகராட்சிக்கு உட்பட்ட 15 வார்டுகளிலும் உள்ள 17000 வீடுகளுக்கம் பூட்டிய வீடுகள் உட்பட அனைத்து வீடுகளும் கண்டறிந்து தவறாமல் வழங்கி கொரோனா வராமல் தடுக்க வாட்ஸ் ஆப் மூலம் செய்தி அனுப்பியதைத் தொடர்ந்து 2.7.2020 அன்று ஆணையர் அவர்களின் உத்திரவு படி 17000 எண்ணம் (குப்பியில் 100 வில்லைகள் அடைத்தது) Dr. Aru's Holistic Homeo care அவர்களிடம் வாங்கி DBC உதவியுடன் 15 வார்டில் உள்ள மக்களுக்கும் வாங்கி விநியோகம் செய்யப்பட்டது.

மேலும், இப்பணிகளை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த இயலாத சூழ்நிலையில், அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 15 ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.3.40 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.675 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

அ) செம்பாக்கம் நகராட்சிக்கு, தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2020–21ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Ward No | Name of the Work | Length (in km) | Estimate Amount (Rs. in Crore) |
|---|---|---|---|---|
| 1 | 1,2,3,7, 10 and 12 | Providing BT Surface to<br>**Ward No.1** Erikarai Street<br>**Ward No.2** Gnanaraja Salai, Vivekanandhar 4th Cross Street, R.B. Avenue 2nd Cross Street, Sam Avenue Rukmani Street and R.B. Avenue 1st Street<br>**Ward No.3** Lakshmikanthan Street**,** | 2.043 | 0.90 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **Ward No.7** Sivasakthi Nagar Extn,Saravana Nagar 5th Street, Sivasakthi Nagar 1st Street and Yogeswari Nagar Main Road<br>**Ward No.10** Kambar Street, Ezhil Nagar Main Road and<br>**Ward No.12** Maraimalai Adigal Street | | |

ஆ) மேலும் இப்பணிக்கான நிதி ஆதாரங்களை கீழ்காணும் விகிதாசார அடிப்படையில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ரூ.கோடியில்)

| மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|
| 0.900 | 0.675 | 0.225 |

**அலுவலக குறிப்பு**:

1. அ) மற்றும் ஆ) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2020–21-ன் கீழ் மேற்கொள்ளவும், அதற்கான நிர்வாக அனுமதி பெறவும், நிதி ஒதுக்கீடு தொகை போக நகராட்சியின் பங்களிப்பு தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.676 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.7

தமிழக அரசு மூலம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் 144 தடை உத்திரவி பிறப்பிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் மற்றும் செலவினத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தடை உத்திரவு காலத்தில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் காய்கறிகளை பொது மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு வாடகை அடிப்படையில் வாகனங்கள் அமர்த்தப்பட்டது. வாடகை தொகை 22.4.2020 முதல் 30.4.2020 வரை வாகன உரிமையாளர்களுக்கு வழங்கியது | 150000 |
| 2 | கொரோனா நோய் தொற்று காலத்தில் பொது மக்களுக்கு தொற்று ஏற்படாமல் சமூக இடைவெளி பின்பற்றிடும் வகையில் அம்மா உணவக கட்டிடத்தில் மராமத்து பணிகள் மேற்கொண்டதற்கு ஒப்பந்ததாரர் திரு. கே. ராமதாஸ்க்கு வழங்கியது | 643689 |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி **1920**ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு **15**ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.677** **செலவினங்கள் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**தனி அலுவலர்**
**செம்பாக்கம் நகராட்சி**